வேண்டிய சிபார்சுகள் இருக்கின்றன. இன்னும் அடிப்படையிலேயே கூட்டுறவு முறை பற்றிய சிபார்சுகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிடலாம் என்ற யோசனை இருக்கின்றது.

### *Agricultural farms.*

*293 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாகாணத்தில் கூட்டுறவுப் பண்ணை சாகுபடி எங்கெங்கு வெற்றிகரமாக நடக்கிறது ?

(ஆ) எத்தனை ஏக்கர் நிலங்கள் கூட்டுறவுப் பண்ணை சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன ?

(இ) இதனால் என்ன அனுகூலம் ?

(ஈ) ஓர் மாதிரி கூட்டுறவுப் பண்ணையை (model co-operative farm) நடத்த அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Co-operative Land Colonisation Societies are working successfully in the following places :—

(1) Kangayampatti, Tanjore District.
(2) Gettisamundram, Coimbatore District.
(3) Alatti Vachinampalayam, Coimbatore District.
(4) Sivasankarapuram, Salem District.
(5) Thengaaumurahad. The Nilgiris District.

(*b*) 6,706·75 acres.

(*c*) Co-operative farming socieities of the tenant farming type known as Land Colonisation Societies help to settle landless labourers in Government waste lands. Joint Farming Societies help small owners to pool their lands for better cultivation. For both these types, Government give liberal financial assistance besides free services of staff and technical advice and guidance. So far as the State is concerned co-operative farming helps to increase food production.

(*d*) No Sir.

SRI A. VEDARATHNAM : மாதிரி கூட்டுறவுப் பண்ணை நடத்த முடியாது போனாலும், கூட்டுறவுப் பண்ணைகள் நன்கு நடக்கிறதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடங்களுக்கு நன்கு நடக்காத பண்ணைகள் நடத்துபவர்களை அழைத்துச் சென்று அவைகளைக் காட்டி அம்மாதிரி நன்கு நடக்காத பண்ணைகளை நன்கு நடக்க வைக்க அரசாங்கம் முன் வருமா ? நன்கு நடக்கிற பண்ணைகளில் ஏக்கர் ஒன்றுக்கு வரும் சராசரி வருமானம் என்னவென்ற விஷயத்தை தயவு செய்து அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்கள் ஏதாவது ஒரு சொஸைட்டியைக் குறித்து அதில் ஏக்கருக்கு என்ன வருமானம் வந்து இருக்கிறது என்று கேட்டால் தனியாக பதில் கொடுக்க முடியும். மொத்தத்தில் வருமானம் நன்கு வந்திருக்கிறது. அவைகள் நன்கு வேலை செய்து கொண்டிருக்கின்றன என்ற கணக்குத்தான் என்னிடம் இப்பொழுது இருக்கிறது.

18th September 1958]

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கூட்டுறவு சாகுபடி முறையை அதிகப்படியாக கொண்டுவர வேண்டுமென்று எண்ணக்கூடிய இந்நாளில் கூட்டுறவு சாகுபடிக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நிலங்களில் தேவஸ்தான நிலங்கள், மடாலய நிலங்கள் இவைகளை உடன் எடுத்துக் கொண்டும், இவைகளை எடுத்துக்கொள்ளும்போது நிர்வாக அதிகாரிகள் மடாலய தலைவர்கள் அனுமதியைக் கோராமலேயே எடுத்துக் கொண்டு கூட்டுறவு சாகுபடி முறையை அமைக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நிலவுடமைக்காரர்களின் அனுமதி இல்லாமல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அது கஷ்டமான விஷயம். அவர்களின் அனுமதியைக் கேட்டுத்தான் இந்த விதமான சொஸைட்டிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

SRI M. P. SARATHI : வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்து கூட்டுறவு பண்ணை ஏற்படுத்த ஒரு மகஜர் வந்ததா ? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : தகவல் என்னிடம் இல்லை.

SRI S. LAZAR : தஞ்சை ஜில்லாவில் ஏற்படுத்திய முதல் சொஸைட்டியில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி வருமானம் எவ்வளவு வந்தது ?

How does it compare with the yield got by an individual in the same locality when he cultivates it himself ?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put, Sir.

SRI P. U. SHANMUGAM : விவசாய அமைச்சர் அவர்கள் அன்று பதிலளிக்கும்போது கூட்டுறவு விவசாயம் வெற்றிகரமாக நடக்கவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் அது வெற்றிகரமாக நடக்கிறது என்று சொல்கிறார்கள். இவ்விரண்டில் எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: கூட்டுறவு அமைச்சர், கூட்டுறவு முறை நன்கு நடக்கிறது என்றுதான் சொல்லுவார்.

*Vaigai Reservoir Project.*

* 294 *Q.*—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to utilize the buildings constructed for the use of the officers and staff employed in the Vaigai Reservoir Project after its completion for the Grama Sevak Training Centre or Teachers Training School?

THE HON. SRI P. KAKKAN : No.

SRI N. R. THIAGARAJAN : வைகை ப்ராஜெக்ட், பெரியார் ப்ராக்ஜெக்ட், அமராவதி ப்ராஜெக்ட் போன்றவைகளுக்கு பல லட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்து கட்டிய கட்டிடங்கள் சும்மா இருக்கிறது. அதை பயன்படுத்த ஏதாவது திட்டம் வகுக்கக் கூடாதா ?

THE HON. SRI P. KAKKAN : எந்தெந்த கட்டிடங்களை பயன்படுத்த முடியுமோ அவைகள் பயன் படுத்தப் படுகிறது. தேவையில்லாத இடங்களில் பயன் படுத்தப்படவில்லை.

*Hut Dwellers.*

* 295 *Q.*—Sx) K. VINYAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how many hut dwellers live in the Mambalam Tank Bund area in Madras;